**வாழ்வுகாலப் பயன்கள் -- ஒவ்வொரு வருடமும்**

காலவரை முடியும் போது கணக்கில் சேர்ந்த இலாபத் தொகை வழங்கப்படுகிறது. அதனைத் தொடர்ந்து பாலிசி தாரரின் 100 வயது வரை, ஒவ்வொரு வருடமும் வாழ்வுகாலப் பயன்களாக காப்பீட்டுத் தொகையில 5.5 சதம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில் பிரீமியம் செலுத்தும் காலத்துக்குப் பின்னரும், பயன்கள் தொடர்ந்து வழங்கப்படுவது ஒரு சிறப்பு அம்சமாகும்.

**முதிர்வுத் தொகை**

பாலிசிதாரர் 100வது வயது வரை வாழும் பொழுது முதிர்வுத் தொகையாக ஒரு காப்புத் தொகை மற்றும் பற்றுறுதிக்கான கூடுதல் தொகை, ஏதேனும் இருப்பின், சேர்த்து வழங்கப்படும். பற்றுறுதிக்கான கூடுதல் தொகை இத்திட்டத்தின் எதிர்கால அனுபவத்தைப் பொறுத்து கணக்கிடப் பட்டு, வழங்கப்படும்.

**இறப்புக் காப்பு**

**திட்ட காலத்தின் போது**

திட்ட காலத்தின் போது துரதிஷ்ட வசமாக இறப்பு நேர்ந்தால் ஒரு காப்புத் தொகையுடன் கணக்கில் சேர்ந்த இலாபத்தொகையும் சேர்த்து வழங்கப்படும்.

**திட்ட காலத்திற்கு பின்னர்**

திட்ட காலத்திற்கு பின்னர் இறப்பு நேர்ந்தால் ஒரு காப்புத் தொகையுடன், பற்றுறுதிக்கான கூடுதல் தொகை ஏதேனும் இருப்பின் சேர்த்து வழங்கப்படும்.

**பாலிசிதாரர் 12 வயதுக்குட்பட்டவராக இருப்பின**

இறப்புக் காப்பு குழந்தையின் 7 வயது அல்லது பாலிசி தேதிகளிலிருந்து 2 ஆண்டுகளுக்குப் பின்னர் இவைகளில் எது பிந்தையதோ அன்றைய தேதியிலிருந்து துவங்குகிறது. இதன் படி காப்பு துவங்கும் தேதிக்குப் பின் பாலிசிதாரர் இறக்க நேர்ந்தால் அதுவரை செலுத்திய பிரீமியம் (கூடுதல் பிரீமியங்கள் நீங்கலாக) வழங்கப்படும். இத்துடன் பாலிசி நிறைவு பெறுகிறது.

காப்புத் தேதிக்கு பின்னர் காப்பீட்டுத் தொகை முழுவதற்குமான இறப்புக் காப்பு கிட்டுகிறது.

**விபத்துப் பாதுகாப்பு மற்றும் திறனிழப்பு பாதுகா**

மிகக்குறைந்த தொகையை பிரீமியத்துடன் சேர்த்து கட்டுவதன் மூலம் இச்சலுகையை பாலிசிதாரர் பெறலா இதன் மூலம் பாலிசி நடப்பு காலத்தில் பாலிசிதாரர் விபத்தினால் இறக்க நேர்ந்தால் ஒரு கூடுதல் காப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது. இச்சலுகை பெற அதிக பட்ச உச்ச வரம்பு 70 ஆகும். இவ்விபத்துப் பாதுகாப்பு தொகை மற்ற பாலிசிகளில் பெறப்பட்ட விபத்துக் காப்பை பொறுத்து அமை

அவ்வாறு அல்லாமல் விபத்தின் காரணமாக திறனிழப்பு ஏற்படுமாயின் ஒரு காப்பீட்டுத் தொகையை 10 வருடத்திற்கு மாதத்தவணையாக பிரித்து வழங்கப்படுகிறது. அத்துடன் திறனிழப்பு ஏற்பட்ட தேதியிலிருந்து பிரீமிய விலக்கும் வழங்கப்படுகிறது.

**இலாபத் தொகை மற்றும் பற்றுதிக்கான கூடுதல் தொ**

பிரீமியத் தொகையினை முதலீடு செய்வதன் மூலம் கிட்டும் இலாபத்தை எல்.ஐ.சி நிறுவனம் பாலிசிதாரர்களுக்கு வருடா வருடம் கணக்கிட்டு பகிர்ந்தளிக்கிறது. இந்த இலாபத்தொகை முதிர்வின் போதோ அல்லது அதற்கு முந்தைய இறப்பின் போதோ வழங்கப்படுகிறது.

**கடன் வசதி**

மூன்று வருடங்களுக்கு மேல் பிரீமியம் செலுத்திய பின்னா் மிகக்குறைந்த வட்டி விகிதத்தில் கடன் பெறலாம் கடன் பெறுவதற்கான விதிமுறைகள் மிக விரைவாகவும் சுலபமாகவும் பெறும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளன.

**வருமான வரி சலுகைகள**

**Section 80(C) of IT Act.**

மேற்கூறிய வருமானவரி விதியின் படி காப்பீட்டுக்காக கட்டப்படும் பிரீமியத்தொகைக்கு வருமான வரி விலக்களிக்கப்படுகிறது. நிகர வருவாயில் இப்பாலிசிக்கான பிரீமியத்தொகை நேரடியாக குறைக்கப்படுகிறது. இச்சலுகைக் கான அதிக பட்சமாக உச்ச வரம்பு 1,00,000 ஆகும்.

இந்த சலுகை பாலிசிதாரரின் பெயரிலுள்ள பாலிசிகளுக்கு மட்டுமல்லாமல், மனைவி மற்றும் பிள்ளைகளின் பாலிசிகளுக்கும் பொருந்தும். (மணமான மகள்களின் பெயரில் உள்ள பாலிசிகளும் இதில் சேரும்)

**Section 10(10D) of IT Act.**

வாழ்வு காலப் பயன்கள், முதிர்வுத்தொகை அல்லது இடையில் இறப்பு நேர்ந்தால் வழங்கப்படும் இறப்புச் காப்புத் தொகை இவை அனைத்திற்குமே வருமான வரி விலக்கு அளிக்கப்படுகிறது. அந்த தொகைக்கு வருமானவரி செலுத்த தேவையில்லை. இது காப்புத் திட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்பு

**ஒப்புவித்தல்(அ)உறுதி அளிக்கப் பட்ட ஒப்புவித்தல் தெ**

குறிப்பிட்ட காலத்திற்கு பின்னா் இத்திட்டத்திலிருந்து வெளியேறவும் வாய்ப்பு உண்டு. அப்படி வெளியேறும் போது வழங்கப்படும் தொகை அதுவரை முடிந்த திட்ட காலம் மற்றும் காப்புத் தொகை, இவைகளைப் பொறுத்து அமையும்.

**இதர நன்மைகள்**

எல்.ஐ.சி வீட்டு வசதி மற்றும் நிதி நிறுவனத்தில் கடன் பெறவும் இப்பாலிசி பயன்படுகிறது. சில குறிப்பிட்ட வங்கிகளில் வங்கிக் கடன் பெற இப்பாலிசி உதவும்.

**மிகக் குறைந்த பிரீமியத்தில் முக்கிய விருப்பச் சலுகைக**

**கூடுதல் இறப்புப் பாதுகாப்பு** (Term Rider Benefit)

ஒரு சிறு தொகையினை பிரீமியத்துடன் சேர்த்து செலுத்துவதன் மூலம் ஒரு காப்பீட்டுத் தொகை அளவு கூடுதல் இறப்பு பாதுகாப்பு கிடைக்கும். இது எல்லா பாலிசிகளிலும் வழங்கப்படும் கூடுதல் இறப்பு பாதுகாப்பையும் சேர்த்து ரூ.25 லட்சத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

**தீவிர நோய் பாதுகாப்பு** (Critical Illness Rider)

இச்சலுகையினால் இப்பாலிசி திட்ட காலத்தில் தீவிர நோய் பாதிப்பிற்கு உள்ளானால் ஒரு கூடுதல் காப்புத்தொகை உடனடியாக வழங்கப்படுகிறது. இதற்காக ஒரு சிறு தொகையினை பிரீமியத்துடன் சேர்த்து செலுத்த வேண்டும். இன்றைய தேதியில் கீழே கொடுக்கப்பட்ட நோய்களுக்கு பாதுகாப்பு கிட்டுகிறது :-

Heart Attack (Myocardial Infarction), Stroke (Cerebro-vascular Accident), Cancer, Kidney Failure, Major Organ Transplant, Paralysis,3rd Degree Burns, Blindness, Coronary Artery By-pass Surgery, Heart Valve Replacement or Repair, & Aorta Graft Surgery.

**பிரீமிய விலக்குச் சலுகை** (Premium Waiver Benefit)

பிரீமிய விலக்குச் சலுகை என்பது, மேலே கொடுக்கப்பட்டுள்ள நோய்களினால் பாலிசிதாரா் பாதிக்கப்பட்டால் அதைத் தொடா்ந்த பிரீமியங்களிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

இந்த அறிக்கை, இத்திட்டத்தின் பயன்களை தாங்களுக்கு முழுமையாக எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற நோக்கம் கொண்டது.
அதிக படியான அல்லது சட்டரீதியான விளக்கங்கள் பெற பாலிசி பத்திரம் ஒன்றையே ஆதாரமாகக் கொள்ள வேண்டும்.